


**01.02.2025**

**தலைப்புச்செய்திகள்**

**1.** புதிய வருமான வரி பிரிவின் கீழ் 12 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானத்திற்கு வரி இல்லை என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.

மக்களவையில் வரும் நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை இன்று அமைச்சர் தாக்கல் செய்தார்.

பிரதமரின் வேளாண் திட்டத்தின் கீழ் 100 மாவட்டங்களில் வேளாண் உற்பத்தி பெருக்க திட்டம் செயல்படுத்தப்படும்

வேளாண் கடன் அட்டைகள் மூலம் விவசாயிகளுக்கான கடன் தொகை 5 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும்.

மருத்துவ கல்லூரிகளில் கூடுதலாக 10 ஆயிரம் இடங்கள் ஏற்படுத்தப்படும்.

ஆதிதிராவிட பழங்குடியின பிரிவின் முதல் மகளிர் தொழில்முனைவோருக்கு 2 கோடி ரூபாய் வரை கடன் உதவி திட்டம் செயல்படுத்தப்படும்.

புற்றுநோய் சிகிச்சை உள்ளிட்ட 36 உயிர்காக்கும் மருந்துகளுக்கு சுங்கவரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்படும் போன்றவை பட்ஜெட்டின் சிறப்பம்சங்கள்

நிதிநிலை அறிக்கை வளர்ச்சி அடைந்த பாரத பாதைக்கான மத்திய அரசின் அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

***********

**பட்ஜெட் அறிவிப்புகள்**

2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் புதிய வருமான வரி கட்டமைப்பின் கீழ் 12 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு வரி இல்லை என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.

மக்களவையில் நிதியமைச்சர் இன்று தாக்கல் செய்த, வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில்: 12 லட்சத்து 75ஆயிரம் ரூபாய் வரையிலான தனி நபர் ஆண்டு வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

**வரி வாய்ஸ்**

பழைய வரி கட்டமைப்பின் கீழ் 4 லட்சம் ரூபாய் வரையிலான வருமான பிரிவினருக்கு வரி இல்லை என்றும்,

4 முதல் 8 லட்சம் வரை 5 சதவிகிதமும்,

8 முதல் 12 லட்சம் வரை 10 சதவிகிதம்,

12 முதல் 16 லட்சம் வரை 15 சதவிகிதம்.
16 முதல் 20 லட்சம் வரை 20 சதவிகிதம்,

20 முதல் 24 லட்சம் வரை 25 சதவிகிதம்,

24 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு 30 சதவிகிதமும் வரி விகிதம் இருக்கும்' என்றும் கூறினார்.

மூத்த குடிமக்களுக்கான வட்டி வகிதத்திற்கான வரி உச்ச வரம்பு 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது,

வீட்டு வாடகை மீதான வரி பிடித்த உச்சவரம்பு 6 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

வருமான வரி தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 2 ஆண்டுகளிலிருந்து 4 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுங்கவரி கட்டமைப்பின் கீழ் 7 வகை மறைமுக இறக்குமதி வரி நீக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் சிகிச்சை மருந்துகள் உள்ளிட்ட 36 உயிர்காக்கும் மருந்துகளுக்கு சுங்கவரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

LED திரைகளுக்கான சுங்கவரி 10 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின்வாகனங்களுக்கான பேட்டரியில் பொருத்தப்படும் லித்தியம் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் 35 கூடுதல் மூலதன பொருட்களுக்கு அடிப்படை சுங்கவரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

மீன் பதப்படுத்துதல் பொருட்களுக்கு 30 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமும்,

மீன் கழிவு உர வகைகளுக்கு 15 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமும் அடிப்படை சுங்க வரி குறைக்கப்படும்.

காப்பீட்டு நிறுவனங்களுக்கான அந்நிய நேரடி முதலீட்டு உச்சவரம்பு 74 சதவிகிதத்திலிருந்து 100 சதவிகிதமாக அதிகரிகரிக்கப்படும் என்றும் கூறினார்.

***********

**வேளாண்**

வேளாண்மை, சிறுகுறு நடுத்தர தொழில்கள், முதலீடுகள், ஏற்றுமதிகள் ஆகிய நான்கும் வளர்ச்சிக்கான உந்துசக்தியாக திகழ்கிறது என்று நிதியமைச்சர் கூறினார்.

இதன்படி பருப்பு வகைகளில் தன்னிறைவை எட்டுவதற்கான 6 ஆண்டு தேசிய இயக்கம் தொடங்கப்படும்.

விதை உற்பத்தியை அதிகரிப்பதற்கான மக்கன்னா வாரியம் ஏற்படுத்தப்படும்.

உயர்ரக மகசூல் விதைகள் உருவாக்குவதற்கான தேசிய இயக்கம் தொடங்கப்படும்.

திருத்தி அமைக்கப்பட்ட வேளாண் கடன் திட்டத்தின் கீழ் கிசான் அட்டை தாரர்களுக்கு வழங்கப்படும் கடன் உதவிதொகை 5 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும்.

ஒரு கோடியே 70 லட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பிரதமரின் தன் தான்ய வேளாண் திட்டத்தின் கீழ் 100 மாவட்டங்களில் வேளாண் உற்பத்தி பெருக்கம் மற்றும் பயிர் பரவலாக்கல் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் கூறினார்.

------**வாய்ஸ்**

***********

**பீகார் அஸ்ஸாம்**

மதிப்பு கூட்டுதல் பிரிவில் உற்பத்தியை அதிகரிக்க பீகாரில் தேசிய உணவு பதப்படுத்துதல் திறன்மேம்பாட்டு, உற்பத்தி நிறுவனம் ஏற்படுத்தப்படும்.

அஸ்ஸாம் மாநிலம் நம்ரூபில் ஆண்டுக்கு பன்னிரெண்டே முக்கால் லட்சம் மெட்ரிக் டன் யூரியா உற்பத்தி திறன் கொண்ட ஆலை அமைக்கப்படும் என்றார்.

***********

**தொழில்**

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 10 கோடி ரூபாய் வரையிலும்,

இப்பிரிவின் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு 20 கோடி ரூபாய் வரையிலும் கடன் உத்திரவாத வரம்பு அதிகரிக்கப்படுகிறது என்று நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கான மூலதன முதலீட்டு உச்சவரம்பு இரண்டரை மடங்காக அதிகரிக்கப்படும்.

ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கான கடன் உத்திரவாத உச்சவரம்பு 20 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.

சுய சார்பு பாரத திட்டத்திற்கு வகை செய்யும் 27 பிரிவுகளுக்கு உத்தரவாதம் வழங்கப்படும்.

சிறுகுறு நடுத்தர தொழில்நிறுவனங்களை உள்ளடக்கி இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தை முன்னெடுத்து செல்ல தேசிய உற்பத்தி இயக்கம் ஏற்படுத்தப்படும்.

SC ST மகளிர் **முதல்தொழில்முனைவோருக்கு** 2 கோடி ரூபாய் கடன் வழங்கும் வகையில் புதிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்படும்.

காலணி மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் 22 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகளுக்கு திட்டமிடப்பட்டிருப்பதோடு ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கான ஏற்றுமதிக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

உயர்ரக பொம்மை தயாரிப்பின் உலகாளவிய மையமாக இந்தியாவை மேம்படும்.

உணவு விநியோகம், மின்னணு வர்த்தக விநியோகம் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடும் ஒருகோடி அலுவல் சாரா தொழிலாளர்களுக்கு தனிநபர் அடையாள அட்டைகள் வழங்கப்படுவதோடு ஜன் ஆரோக்கியா சுகாதார திட்டத்திற்கு வகை செய்யப்படும்.

சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வாநிதி திட்டம் மறுசீரமைக்கப்படும்.

நகர்புற பணியாளர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

ஊரக பகுதி மக்கள் மற்றும் சுய உதவிக்குழுவினருக்கு கிராம நிதி திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்கான கட்டமைப்பு உருவாக்கப்படும்.

***********

**கல்வி**

நாட்டில் 23 இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களின் திறன் கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

500 கோடி ரூபாய் செலவில் செயற்கை நுண்ணறவு கல்விக்கான அறிவு சார் மையம் ஏற்படுத்தப்படும்.

பள்ளிகளில் 50 ஆயிரம் அட்டல் ஆராய்ச்சி ஆய்வகங்கள் அமைக்கப்படும்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டிற்கான 5 தேசிய மையங்கள் தொடங்கப்படும்.

பாரத் நெட் திட்டத்தின் கீழ் ஊரக பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அனைத்து அரசு மேல்நிலை பள்ளிகளுக்கு அகண்ட அலைவரிசை சேவை ஏற்படுத்தப்படும்.

பள்ளி மற்றும் உயர்கல்வி மாணாக்கர் கல்வி அறிவை தத்தம் மொழிகளில் இலகுவாக புரிந்து கொள்ள வகை செய்யும் பாரத புத்தக திட்டம் என்ற மின்னணு பாட மொழி திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

**வாய்ஸ்**

பிரதமரின் ஆராய்ச்சி அறக்கட்டளையின் மூலம் சிறந்த தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்கு 10 ஆயிரம் பேருக்கு நிதி உதவிகள் வழங்கப்படும்.

அறிவுதிறன்களை பகிர்ந்துகொள்வதற்கான தேசிய மின்னணு இயக்கம் ஏற்படுத்தப்படும்.

***********

**மருத்துவம்**

அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளில் புற்றுநோய் மையங்களும்,

புற்றுநோயாளிகளுக்கான சிகிச்சை மையங்களும் உருவாக்கப்படும்.

இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் கூடுதலாக ஆறாயிரத்து 500 இடங்களும்,

மருத்துவ கல்லூரிகளில் கூடுதலாக 10 ஆயிரம் இடங்களும் ஏற்படுத்தப்படும்.

தனியார் பங்களிப்புடன் மருத்துவ சுற்றுலா மற்றும் இந்தியாவில் சுகம் பெறுங்கள் திட்டம் ஊக்குவிக்கப்படும்.

ஜல்ஜீவன் குடிநீர் திட்டம் 2028வரை நீட்டிக்கப்படும்.

ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்புற சவால்களை எதிர்கொள்வதற்கான **மேம்பாட்டு நிதி** உருவாக்கப்படும்.

20 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறிய ரக அணுஉலைகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

தனியார் பங்களிப்புடன் 2047ஆம் ஆண்டு வாக்கில் 100 ஜிகா வாட் அணுசக்தி திறன் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், அணுசக்தி சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

உதான் திட்டத்தின் மூலம் மேலும் 120 புதிய பகுதிகள் இணைக்கப்படும்.

உள்நாட்டு கப்பல் கட்டுமான பணிகள் மற்றும் கடல் கட்டமைப்பு திட்டங்களுக்காக 25 ஆயிரம் கோடி ரூபாய் கடல்சார் மேம்பாட்டு நிதி ஒதுக்கப்படும்.

சுரங்கத்துறை நடைமுறைகள் ஊக்குவிக்கப்பட்டு முக்கிய தாதுப்பொருட்களுக்கான கொள்கைகள் உருவாக்கப்படும்.

ஏற்றுமதி ஊக்குவிப்பு இயக்கம் தொடங்கப்படும்.

திருத்தியமைக்கப்பட்ட KYC வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் பதிவு தொடங்கப்படும்.

ஜன் விஷ்வாஷ் மசோதா கொண்டுவரப்படும்.

மாநிலங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டியை உருக்குவதற்கான முதலீட்டுக்கு உகந்த குறியீடுகள் உருவாக்கப்படும்.

***********

**பட்ஜெட் செலவினம்**

மொத்த செலவினம் 50 லட்சத்து 65 ஆயிரம் கோடி ரூபாயாக காட்டப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் நிதி பற்றாக்குறை 4.4 சதவிகிதமாக உள்ளது.

நிதி பற்றாக்குறையை ஈடுகட்ட 11 லட்சத்து 4 ஆயிரம் கோடி நிகர சந்தை கடன்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

***********

**பிரதமர் வரவேற்பு**

நிதிநிலை அறிக்கை வளர்ச்சி அடைந்த பாரத பாதைக்கான மத்திய அரசின் அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

140 கோடி இந்தியர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

***********

**பட்ஜெட் வரவேற்பு அமித்ஷா**

வளர்ச்சி அடைந்த இந்தியா இலக்கை எட்டுவதற்கான ஆக்கப்பூர்வமான பட்ஜெட் இது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா கூறியுள்ளார்.

விவசாயிகள் ஏழை எளிய மக்கள் நடுத்தர பிரிவினர், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், திறன் மேம்பாடு மற்றும் முதலீட்டு பிரிவுகள் உள்ளிட்ட அனைத்தையும் இந்த பட்ஜெட் உள்ளடக்கியிருப்பதாகவும்,

தற்சார்பு இந்தியா இலக்கின் வரைபடமாக இது திகழ்கிறது என்றும் கூறியுள்ளார்.

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள வருமான வரி விலக்கு, நடுத்தர வகுப்பினருக்கு பயனளிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

***********

**வரவேற்பு எல். முருகன்**

கிசான் கடன் அட்டைகள் மூலம் விவசாய பெருமக்களுக்கான 3 லட்சம் ரூபாய் கடன் தொகை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது அவர்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்த ஒரு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பிற்காக பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கும், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறினார்.

***********

**வரவேற்பு சிவசேனா**

இந்த பட்ஜெட்டை வரவேற்றுள்ள சிவசேனா வரி நிவாரணங்கள் அறிவிக்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளது.

பட்ஜெட்டை வரவேற்றுள்ள இந்திய தொழில் கூட்டமைப்பு சுற்றுலா மற்றும் கடல்சார் பிரிவிற்கு பெரிய அளவில் உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இந்த பட்ஜெட்டின் சிறப்பு அம்சம் வருமான வரி சலுகை என்று கூறியுள்ள அமைப்பின் தலைவர் காலணி மற்றும் தோல் துறைகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

***********

**பட்ஜெட் காங்கிரஸ் எதிர்ப்பு**

நடுத்தர பிரிவினருக்கும் இளையோருக்கும் பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படவில்லை என்று காங்கிரஸ் கட்சியின் திரு.சசிதரூர் தெரிவித்துள்ளார்.

தேர்தலை முன்னிட்டு பீகார் மாநிலத்திற்கு பல அறிவிப்புகள் வெளியாகி இருப்பதாகவும், ஆனால் தென் மாநிலங்கள் முழுமையாக புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் திமுக, திரிணாமுல், காங்கிரஸ் அகாலிதல் கட்சிகள் குறை கூறியுள்ளன.

***********

**குடியரசு தலைவர்**

புத்தகம் வாசிப்பது பொழுதுபோக்கு மட்டுமன்றி மாற்றத்திற்கான அனுபவம் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் சர்வதேச புத்தக கண்காட்சியை இன்று தொடங்கி வைத்து பேசிய அவர் பல்வேறு மொழிகளின் புத்தகங்களை படிப்பதன் மூலம் சமூகம் மற்றும் பிறபகுதிகளை ஒருங்கிணைக்க வழிகோலும் என்றார்.

9 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் ரஷ்யா ஃபிரான்ஸ் ஸ்பெயின் கத்தார் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றுள்ளன.

***********

**மதிவேந்தன்**

நாமக்கல்லில் 3ஆவது புத்தக திருவிழாவை மாநில ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் இன்று தொடங்கிவைத்தார்.

வரும் 10ஆம் தேதிவரை இக்கண்காட்சி நடைபெறுகிறது.

***********

**வெள்ளியங்கிரி**

கோவை வெள்ளியங்கிரி மலையேற்றத்திற்கு இன்றுமுதல் பக்தர்கள் அனுமதிக்கப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

***********

**கிரிக்கெட்**

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி மும்பையில் நாளை நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 3-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான 3 ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெற உள்ள நிலையில் முதல் போட்டி வரும் 6ஆம் தேதி நாக்பூரில் நடைபெறுகிறது.

***********

**மகளிர் கிரிக்கெட்**

19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா நாளை தென்னாப்பிரிக்காவை கோலாலம்பூரில் எதிர்கொள்கிறது.

***********

**ஹாக்கி**

ரூர்கெலாவில் நடைபெறும் ஹாக்கி இந்தியா லீக் இறுதிபோட்டியில் இன்று ஹைதராபாத் - பெங்கால் அணியுடன் மோதுகிறது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் தமிழ்நாடு அணி - சூர்மா அணியை எதிர்கொள்கிறது.

***********

**இத்துடன் செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********